Tamil Sudar

Chennai Date: 18.01.08 Page No: 05

# புரட்சிகரமான சிந்தனையாளர் எல்.வி.பிரசாத்

## நூற்றாண்டு விழாவில் முதல்வர் கருணாநிதி புகழாரம்

சென்னை, ஜன.18- பழம்பெரும் இயக்குநரும், தயாரிப்பாளருமான மறைந்த எல்.வி.பிரசாத்தின் நூற்றாண்டு விழா முதல்வர் கருணாநிதி தலைமையில் சென்னையில் நேற்று நடைபெற்றது.

'எல்.வி. பிரசாத், முதல்வர் கருணாநிதி வசனத்தில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நடிப்பில் வெளிவந்த 'மனோகரா', 'இருவர் உள்ளம்' போன்ற படங்களை இயக்கி, தயாரித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. விழாவில் மத்திய அமைச்சர் தாசரி நாராயணராவ், இயக்குனர்கள் கே.பாலச்சந்தர், மணிரத்னம், நடிகர் கமலஹாசன், இந்தி திரையுலக நட்சத்திரம் ஜிதேந்திரா, பழம்பெரும் நடிகைகள் அஞ்சலி தேவி, சரோஜா தேவி, சவுகார் ஜானகி ஆகியோர் கலந்து கொண்டனர். விழாவில் முதல்வர் கருணாநிதி பேசியதாவது:

நான் சமீப காலமாகத் திரையுலகம் சம்பந்தமான விழாக்களில் அதிகம் பங்கேற்று வருகிறேன். அந்த அடிப்படையில் மறைந்த எல்.வி.பிரசாத்தின் நூற்றாண்டு விழாவில் நான் பங்கேற்பதாக யாரும் கருத வேண்டாம். நான் இந்த விழாவிற்கு நன்றியைத் தெரிவிக்கும் நோக்குடன் வந்துள்ளேன். இவ்விழாவில் பங்கேற்பது என் கடமைகளுள் ஒன்றாகக் கருதுகிறேன்.

சாதாரண மனிதனாகத் தன் வாழ்க்கையைத் தொடங்கி சரித்திர நாயகனாக மாறியிருப்பவர் எல்.வி. பிரசாத். அவருடன் எனக்கு நெருக்கமான நட்பும், உறவும் இருந்தது. அவர் தயாரிப்பில் 'மனோகரா', 'இருவர் உள்ளம்', 'தாயில்லா பிள்ளை' என 3 திரைப்படங்களில் நான் வசனம் எழுதியுள்ளேன். இங்கே பேசிய அனைவரும் 'தாயில்லா பிள்ளை'யை மறந்து விட்டனர். அந்தப் படத்தின் தலைப்பைப் போல அப்படம் இங்கு மறக்கப்பட்டு விட்டது.

இங்கு நடிகை சரோஜா தேவி பேசும் போது, 'இருவர் உள்ளம்' படத்தில் நடிப்பதற்காக ரூ.25 ஆயிரம் அதிகமாகக் கேட்டதாகவும், அதற்கு 'அப்படம் 100 நாள் ஓடினால் அப்பணத்தைத் தருவதாக' எல்.வி.பிரசாத் கூறியதாக ஒரு சம்பவத்தைச் சொன்னார். 'இருவர் உள்ளம்' படம் வெற்றி பெற்று 100 நாள் ஓடிய பிறகு வாக்குறுதி கொடுத்தபடி ரூ.25 ஆயிரத்தை எல்.வி.பிரசாத் கொடுத்து தனது நாணயத்தை நிரூபித்ததாகவும் கூறினார்.




இதே போன்றதொரு சம்பவம் என் வாழ்க்கையிலும் நிகழ்ந்தது. 'தாயில்லா பிள்ளை' படத்திற்கு நான் வசனம் எழுத ஒப்பந்தம் செய்யப்பட்ட போது எனக்குக் குறைவான சம்பளமே நிர்ணயிக்கப்பட்டிருந்தது. எனவே அந்தப் படத்தின் தயாரிப்பாளரான எல்.வி. பிரசாத்திடம் மேலும் ரூ.10 ஆயிரம் கேட்டேன். அப்போது அதற்கு அவர் 'இப்படம் வெற்றி பெற்றால் நீங்கள் கேட்ட தொகையைத் தருகிறேன்' என்றார். அதே போலவே அப்படம் 100 நாள் ஓடி பெரிய வெற்றிப் படமானது. இந்நிலையில் எனக்கு அவரின் அடுத்த படமான 'இருவர் உள்ளத்திற்கும்' வசனம் எழுத ஒப்பந்தமானேன். அப்போது எல்.வி.பிரசாத் எனக்குக் கொடுத்த வாக்குறுதிப்படி அந்த 10 ஆயிரம் ரூபாயை தருவாரா, மாட்டாரா என்கிற எண்ணத்தில் இருந்தேன்.

இந்நிலையில் ஒரு நாள் எதிர்பாராத விதமாக நான் வசனம் எழுதிக் கொண்டிருந்த அறைக்கு வருகை தந்த பிரசாத் ரூ. 10 ஆயிரத்தை என்னிடம் கொடுத்து 'நான் எனது வாக்குறுதியை நிறைவேற்றி விட்டேன்' என்று கூறினார். அதைப் பார்த்து எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. சினிமா உலகத்தில் இப்படியொரு நாணயமான மனிதரா என்று வியப்புற்றேன்.

இதைப் போலவே முன்பு ஒரு படத்திற்கு வசனம் எழுதிக் கொடுத்தேன். அதற்கு ரூ.50 ஆயிரம் சம்பளமாக எனக்குப் பேசப்பட்டது. ஆனால் அந்தப் படம் 100 நாள் ஓடிய பிறகு எனது சம்பள பணத்தைத் தருவதாகத் தயாரிப்பாளர் சொன்னார். படமும் வெளிவந்து வெற்றிகரமாக ஓடியது. ஆனால் 99வது நாளிலேயே அந்தத் தயாரிப்பாளர் தியேட்டரில் இருந்து படத்தை எடுத்து விட்டார். இப்படிப்பட்ட சினி மாக்காரர்கள் மத்தியில் எல்.வி.பிரசாத் நேர்மையான வராகவும், நாணயமிக்கவராகவும் வாழ்ந்திருக்கிறார்.

அவர் புரட்சிகரமான சிந்தனைக்குச் சொந்தக்காரர். மிகவும் எளிமையான மனிதர். பணக்காரர்களுக்குப் பயப்படாதவர். அதிகார வர்க்கத்திற்கு அஞ்சாதவர். இப்படிப்பட்ட மனிதர் இன்று நம்மிடையே இல்லாதது திரையுலகத்திற்கு ஏற்பட்ட பெரிய இழப்பாகும். எல்.வி.பிரசாத்தின் நேர்மையையும், நாணயத்தையும், சமூக சிந்தனையையும், ஆற்றலையும் அவரது பிள்ளைகள் பின்பற்றி நடக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.